தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 17, பிரமாதி - திருவள்ளுவர் ஆண்டு 2031
2000 மார்ச் 30, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஆற்றின் அளவறிந்து கற்க அவையஞ்சா
மாற்றங் கொடுத்தற் பொருட்டு".

அவையில் பேசும்பொழுது குறுக்கீடுகளுக்கு அஞ்சாமல் மறுமொழி சொல்வதற்கு ஏற்ற வகையில் இலக்கணமும், தருக்கமெனப்படும் அளவைத் திறமும் கற்றிருக்க வேண்டும்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா எண் 141, திரு. ஆர்.ஆர். சேகரன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

141—

தொழிற்சாலைகளின் எண்ணிக்கை

***13199—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்ட பின் தொடங்கப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு?

[*2000 மார்ச் 30*

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காடயாம்பட்டி பஞ்சாயத்து ஒன்றியம் தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டபின் தொடங்கப்பட்ட தொழிற்சாலைகளினுடைய எண்ணிக்கை 22.

திரு. ஆர்.ஆர். சேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்நிய நாட்டு முதலீட்டுடன் தொடங்கப்படக்கூடிய பெரிய தொழிற்சாலைகள், குறிப்பாக ஹூண்டாய், ஃபோர்டு, போன்ற தொழிற்சாலைகள் எல்லாம் சென்னையைச் சுற்றியே தொடங்கப்படுகின்றன. ஏற்கெனவே ஜனநெருக்கடி மிகுந்த சென்னைக்கு இது மேலும் அதிக சிக்கலை தோற்றுவிக்கக்கூடும். எங்களுடைய ஓமலூர் தொகுதி, தேசிய நெடுஞ்சாலையிலே உள்ளது. தென் மாவட்டங்களை வடமாநிலங்களோடு இணைக்கும் இணைப்புச் சாலையாக இருக்கின்றது. அதுமட்டுமல்ல, அங்கே விமான நிலையமும் இருக்கிறது. அதுமட்டுமல்ல, ஏராளமான மனித சக்தியும் அங்கே கிடைக்கின்றது. இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு ஒரு பெரிய தொழிற்சாலையை அந்தப் பகுதியிலே தொடங்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, காடயாம்பட்டியிலே பெரிய தொழிற்சாலையைக் கொண்டு வருவதற்கான வசதி வாய்ப்புகள் இல்லை. மாவட்டத்தைப் பொறுத்தவரையில், பெரிய தொழிற்சாலையைக் கொண்டு வருவதற்கான வசதி வாய்ப்புகளை எண்ணிப் பார்த்து அரசு அது குறித்துப் பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 142, திரு. கு. மனோகரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

142—

கலைக் கல்லூரியில் கணினி படிப்புகள்

***30249—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—